"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"
ஆமோஸ் 4:12.

தேவ எக்காளம்



"இதோ சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது". (வெளி. 22:12)

Vol. 12] அக்டோபர் 1980 [No. 10

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

இராக்காலம் வருகிறது.



இந்தத் தலைமுறையில் வாழும் நமக்குப் பரிசுத்தவான் ராபர்ட் மர்ரே மச்செயின் அவர்களின் செய்தி என்ன? நிச்சயமாக அது குறைந்த பட்சம் இரண்டு காரியங்களாகும். ஒன்று, தனிப்பட்ட நிலையில் இராக் காலங்களிலும், பகற் காலங்களிலுமாக இரகசிய ஜெபத்திலும், வேதவசன தியானத்திலும் ஈடுபட்டு பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துதலின்படி நமது ஆத்துமாவிலும், வாழ்க்கையிலும் பரிசுத்தத்தை நாம் கண்டிப்பாக வாஞ்சித்துத் தேட வேண்டும். இரண்டாவது காரியம் என்னவெனில் முதலில் குறிப்பிட்டக் காரியத்தைத் தொடர்ந்து மார்க்கம் தப்பி அலையும் ஆண்களையும், பெண்களையும் நித்திய ஜீவபாதைக்குள் வழிநடத்தவேண்டுமென்ற மேலான, பரிசுத்த ஆத்தும வாஞ்சை கட்டுக்கடங்காத விதத்தில் நம்மில் எழும்பவேண்டும்.

மர்ரே மச்செயின் அதைத் தன்னளவில் கூறுகையில்:–

“நான் வயல் வெளிகளில் நடந்து சென்றுகொண்டிருக்கையில் எனது மந்தையின் ஒவ்வொருவரும் வெகு விரைவில் ஒன்று மோட்சத்திற்கோ அல்லது எரி நரகிற்கோ சென்றடைவர் என்ற எண்ணம் கட்டுக்கடங்கா தேவ வல்லமையின் பாரத்தோடு என் மேல் அமர்ந்தது. அவ்வேளையில், நான் அனைவரும் சுவிசேஷத்தைக் கேட்கத்தக்கதாக இடிமுழக்கமிடும் ஒரு நாவை அல்லது நான் ஒவ்வொருவரிடமும் நேரில் சென்று “உன் ஜீவனைக் காத்துக் கொள்” என்று எச்சரிக்கத்தக்கதாக என் சரீரம் இரும்பினால் உருவாக்கப்பட்டிருக்க நான் எத்தனையாய் ஆவல் கொண்டேன் தெரியுமா? ஆ! பாவ மைந்தரே, உங்கள்மேல் வரவிருக்கும் தேவ கோபாக்கினையின் மா பயங்கர இரத்தப்பழியை என் வீட்டு வாசற்படியில் அன்றோ நீங்கள் கொட்டுகின்றீர்கள் என்பதைக் குறித்து நீங்கள் சிறிதுதானும் எண்ணவில்லையே!”

மர்ரே மச்செயின் தனது கடிதங்கள் ஒவ்வொன்றையும் மலைகளுக்கு அப்பால் சென்று அஸ்தமிக்கும் சூரியனின் அஸ்தமனக்

(28 ம் பக்கம் பார்க்க)

கர்த்தருக்குள் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

கடந்த ஆகஸ்ட் மாதம் 19-ம் தேதி இரவு சவூதி அரேபியாவிலுள்ள ரியாத் நகரின் விமான தளத்திலிருந்து மூன்று நட்சத்திர அடையாளமிட்ட ஜெட் விமானம் ஒன்று 285 பயணிகள், 16 விமானப் பணியாளர்களுடன் செங்கடல் துறைமுகமான ஜிட்டாவுக்குப் பறந்துசென்றது. மேற்குத் திசை வழியாகப் பறந்துசென்ற அவ்விமானம் 80 கிலோ மீட்டர் தூரம் பறந்துசென்றபின் சுற்றிவளைத்து மீண்டும் விமான தளத்தை நோக்கி விரைந்துவந்தது. விமானத்திற்கும், விமான நிலையத்தின் கட்டுப்பாட்டுக் கோபுரத்திற்கும் (Control Tower) அப்பொழுது எவ்விதத் தொடர்பும் இல்லாமற் போய்விட்டது.

சற்று நேரம் கழித்து விமானத்திலிருந்து செய்தி வந்தது. "விமானத்தின் பின்பக்கமிருந்து பயங்கர அக்கினி நாவுகள் வந்து கொண்டிருக்கின்றது" என்று விமானி தகவல் அளித்தார்.

விமான தளத்தில் இறங்கிய அந்த விமானம் தீப்பற்றி எரியத் தொடங்கியது. உடனடியாகத் தீயணைப்புப் படையினரும், பாதுகாப்பு ஹெலிகாப்டர்களும் மற்றும் ஆம்புலன்ஸ் வண்டிகளும் அந்த விமானத்தைச் சூழ்ந்துகொண்டு தீயை அணைப்பதில் தீவிரமாகப் போராடினர். அக்கினி நாவுகள் விமானத்தின் உள்ளிருந்து ஜன்னல்கள் வழியாக வெளியே உக்கிரமாக வீசியபடியால் விமானத்தின் கதவைத் திறந்து பயணிகள் எவரையும் மீட்பது என்பது முற்றும்கூடாத காரியமாய்ப் போய்விட்டது. "அல்லாவிடமிருந்து வந்த நாம் அவரிடமே திரும்பிச் செல்லுவோம்" என்ற குரானின் வாசகத்தை சவூதி அரேபியா வானொலி இசைக்க ஆரம்பித்தது. மிகத் துயரமான சம்பவங்கள் நாட்டில் நடக்கும் சமயங்களில் இவ்விதம் வானொலி அங்கு இசைப்பது வழக்கமாம்.

சிலமணி நேரங்கள் தீயுடன் போராடி விமானத்தின் கதவை உடைத்து உள்ளே பார்க்கையில் விமானத்திலிருந்த 301 மக்களுமே தீயில் மாண்டு கிடப்பது தெரிய வந்தது. அனைத்துப் பிணங்களும் விமானத்தின் கதவண்டையிலேயே குவியல் குவியலாகக் கருகிக்கிடந்தன. பெரும்பாலும் மெக்கா நகருக்குப் புனித யாத்திரை செல்லும் முகமதிய மக்கள் அதில் பயணம் செய்தனர். 45 பெண்களும் 35 குழந்தைகளும்கூட அதிலிருந்திருக்கின்றனர். எத்தனை பயங்கரம்!

விமானத்தின் இரட்டை யந்திரங்களும் எவ்விதமான சிறியதான பழுதொன்றுமின்றி அப்படியே யிருந்ததுடன், விமானத்தின் பிரமாண்டமான பெட்ரோல் சேமிப்புப் பெட்டகங்களும் சேதமின்

றிக் காணப்பட்டன. அப்படியானால் இந்த நெருப்புக்குக் காரணம் என்ன?

மெக்காவுக்கு ஹஜ் யாத்திரை சென்ற ஒரு பயணியின் கீழ்ப்படியாமையாலேயே இந்தப் பெரும் விபத்து உண்டாயிற்று, என்பது கண்டுபிடிக்கப்பட்டது. பாதுகாப்பு அதிகாரிகளை ஏமாற்றி, அவர்கள் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் தந்திரமாகத் தன்னுடன் கொண்டுவந்திருந்த, மிக எளிதில் தீப்பற்றி எரியக்கூடிய Butane Gas நிரப்பப்பட்ட அக்கினி வாயு அடுப்பு (Stove) ஒன்று தீப்பற்றிக்கொண்ட காரணத்தாலேயே இத்தனை பேரிழப்பு நேர்ந்துவிட்டது. விமானத்தின் தீயை அணைத்து உள்ளே பார்த்தபோது பின் ஆசனத்தில் கிடந்த அந்த வாயு அடுப்பையும், அதை அணைக்கப்பயன்படுத்தப்பட்ட விமானத்திற்குள்ளிருந்த தீயணைப்புக் கருவி (Fire Extinguisher) ஒன்று பயன்படுத்தப்பட்டிருப்பதும் தெரிய வந்தது. அந்தோ! ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் எத்தனை பெரியதோர் பயங்கர அழிவு உண்டாயிற்று! எத்தனை அருமையான உயிர்கள் நொடிப்பொழுதில் கருகிப்போயின.

மேற்கு தீபெத்தில் ஆண்டவருடைய பரிசுத்த பணிகளை நான் முடித்துவிட்டுக் காஷ்மீருக்கு வந்தபோது அங்கு நிகழ்ந்திருந்த சம்பவங்கள் என் உள்ளத்தை உடைப்பதாயிருந்தன. இந்து, முஸ்லீம் கலவரங்கள் நடந்து அநேகர் மாண்டுபோயிருந்தனர். அநேகக் கடைகளும், கட்டிடங்களும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டிருந்தன. கருகிக்கிடந்த கார்களை நான் தெருக்களில் காணமுடிந்தது. நகரத்தைப் போலீஸ் அதிகாரிகளும், ஆயுதம் தாங்கிய காவலரும் ரோந்து சுற்றிவருவதைக் கண்டேன்.

இதுமாத்திரம்தானா? சமீபநாட்களில் இந்தியாவில் குறிப்பாக மொரதாபாத், அலிகார், அலகாபாத் போன்ற இடங்களில் நடந்த பயங்கரமான இந்து முஸ்லீம் கலவரங்களை நாம் செய்தித் தாட்களில் பார்த்தோம். மனிதர் ஒருவரையொருவர் சமையல் அறையில் காய்கறிகளை வெட்டித் துண்டாக்குவதைப்போல் வெட்டித் துண்டாக்கிச் சாக்கடைகளுக்குள்ளும், ரயில்வே தண்டவாளங்களிலும் வீசி எறிந்தனர். அரசாங்கம் அதனை அடக்கக் கடும் பிரயாசம் எடுக்க வேண்டியதாயிருந்தது. ஏன் இந்த இந்து முஸ்லீம் கலவரங்கள்! பின்னணியத்தைத் திரும்பி நாம் நோக்குவோமானால் இவை யாவற்றிற்கும் காரணம் ஒரு தனி மனிதனின் கீழ்ப்படியாமை என்பதை நாம் காணமுடியும். "உன் கர்ப்பப் பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான்" (ஆதி. 15:4) என்று சர்வ வல்லமையுள்ள தேவன் மிகத் திட்டம் தெளிவாக நமது முற்பிதாவாகிய ஆபிரகாமுக்கு மாறாத வாக்களித்தபோதிலும், தேவனின் வாக்கு நிறைவேறப் பொறுமையுடன் காத்திராமல், கர்த்தரிடம் ஆலோசனை கேளாமல், மனைவியின் சொல்கேட்டு

..கிப்து தேசத்தாளாகிய ஆகாரோடே சேர்ந்தபடியால்தானே இத்
..னே அவலநிலை. இஸ்மவேல் கர்ப்பத்தில் உற்பத்தியானவுடனே
சண்டையும், மனக்கசப்பும் ஆரம்பமாயிற்று. அவன் சிறுவனாயி
ருக்கும்போதும் வீட்டில் அவனிமித்தம் ஓயாத சண்டைதான்.
(ஆதி. 21:9) இன்றும் அவன் நிமித்தம் உலகில் போர்களும்,
இனக் கலவரங்களும், இரத்தக் களறியும் முடிவின்றி நடந்து
கொண்டுதானிருக்கின்றன.

இந்தத் தலையங்கம் எழுதப்படுகையில் ஈரான், ஈராக் யுத்தம்
கடுமையாக நடந்துகொண்டிருப்பதையும், ஆயிரக்கணக்கான மாந்
தர் கொல்லப்பட்டிருப்பதையும், பல கோடி ரூபாய் மதிப்புள்ள
எண்ணெய் வளம் அந்நாடுகளில் அழிந்து நாசமாய்ப் போய்விட்ட
தையும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

கர்த்தருடைய ஆவியானவரின் பலத்த உணர்த்துதலுக்குச்
சற்றும் கீழ்ப்படிய மனமற்று பத்சேபாளின் அழகை இச்சித்து அவ
ளுடன் வேசித்தனம் பண்ணி, அவளது புருஷனைக் கொல்லப்பண்
ணிய பாவ அக்கிரமங்களுக்காகத் தாவீது இராஜா அடைந்த நிந்
தைகள், அவமானங்கள், சிறுமைகள், கண்ணீர்கள், மரண அடி
கள் எத்தனை, எத்தனை! 51-ம் சங்கீதத்தை நாம் பார்ப்போமானால்
மேற்கண்ட பாதகங்களினிமித்தம் தேவன் அவரை நொறுக்கினார்
(8) என்று நாம் காண்கின்றோம்.

நமது ஆதித் தாய் தந்தையரின் கீழ்ப்படியாமையால் உலகில்
பாவமும், மரணமும், சாபமும், வேதனையும் பிரவேசித்து இந்நாள்
வரை அது தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல், கர்த்தர்
தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்
நிதியில் கொண்டுவந்த நாதாபும், அபியூவும் கர்த்தருடைய அக்கி
னியால் பட்சிக்கப்பட்டார்கள். (லேவி. 10:1,2)

ஆகானின் கீழ்ப்படியாமையால் பாளையத்தில் கலக்கமும், அங்
கலாய்ப்பும், புலம்பலும் தோல்வியுமுண்டாயிற்று, (யோசு. 7:5)
அது மாத்திரமல்ல, அவனுக்கும், அவன் குடும்பத்தினருக்கும்
கிடைத்த சன்மானம் அவர்கள்மேல் குவிக்கப்பட்டப் பெருங்கற்
குவியலே. (யோசு. 7:26)

சவுல் ராஜாவின் கீழ்ப்படியாமையால் ராஜ்யபாரம் அவனது
கரத்திலிருந்து பறித்துக்கொள்ளப்பட்டதுடன், கர்த்தருடைய ஆவி
யானவரும் அவனைவிட்டு விலகிச் சென்று தேவனால் விடப்பட்டப்
பொல்லாத ஆவியைப் பெற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. அவ
னது முடிவும் மகா நிர்ப்பந்தமே. (1 சாமு, 31:4)

"நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்தும், நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர்" (2இரா. 20:1) என்று ஏசாயா தீர்க்கன் கூறின கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து மரிக்க ஆயத்தப்பட்டிருந்தால் எசேக்கியா ராஜாவின் சரிதம் எவ்வளவு புகழ்மணக்க வேதாகமத்தில் முடிவுபெற்றிருக்கும். ஆனால், எத்தனை பரிதாபம்! கர்த்தருடைய ஞானமுள்ள ஆலோசனைக்குக் கீழ்ப்படியாமல், மரிக்க மனமின்றி ஆயுளைக் கேட்டமையால் நடந்தது என்ன? தேவனுக்கு விரோதமாகக் கொடிய பாவ அக்கிரமம் செய்ய மனாசே என்ற மகனைப் பெற்றது மட்டுமல்ல, எசேக்கியாவின் ஆவிக்குரிய பரிசுத்த வாழ்வும் தடுமாற்றம் கண்டுபோயிற்று. (2 நாளா. 32:25)

தேவ நியமத்திற்குக் கீழ்ப்படிய மனமற்ற அனனியா, சப்பீராளின் முடிவும் நமக்குத் தெரியாததொன்றல்ல.

அது யாராயிருந்தாலும் சரியே, "கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வரும்". (கொலோ. 3:6)

நம்முடைய கிறிஸ்தவ, ஆவிக்குரிய வெற்றி வாழ்க்கையின் ஒரு மாபெரும் இரகசியம், கர்த்தருடைய வார்த்தைகளுக்கு நாம் அப்படியே கீழ்ப்படிந்து நடப்பதாகும். "கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்" (1 சாமு. 15:22) என்று தீர்க்கன் கூறுகின்றார்.

"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவா. 14:15) The ambplified New Testament ஆங்கிலப் புதிய ஏற்பாட்டில் "நீங்கள் உண்மையாய் என்னில் அன்பு கூறுகிறவர்களாயிருந்தால் என் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியுங்கள்" என்று முதலில் குறிப்பிட்ட வசனம் திருப்பப்பட்டுள்ளது.

நம்முடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் ஏவுகின்ற ஒவ்வொரு காரியத்திலும் நாம் அவருக்கு முழு மனதுடன் கீழ்ப்படிந்து நடப்போமானால், அவருடைய திவ்விய பிரசன்னம் எப்பொழுதும் நம்மில் நிலைத்திருப்பதை நாம் காண்போம். ஆண்டவர் பார்க்கச் சொல்லாததை, அவர் பார்க்க விரும்பாததை நாம் பார்க்கக்கூடாது. அவர் பேச விரும்பாத காரியங்களை நாம் பேசுதல் கூடாது. அவர் செல்ல அனுமதிக்காத இடங்களுக்கு நாம் நமது கால்களை விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டும். அவர் கேட்க விரும்பாத காரியங்களை நாம் கேட்க நமது செவிகளைச் சாய்க்கக் கூடாது. அவர் ஜெபிக்கச் சொல்லும்போது நாம் ஜெபித்து, அவர்

நம்மை ஸ்தோத்திரிக்கச் சொல்லும்போது நாம் அவரை ஸ்தோத்திரித்து, அவர் நம்மைப் பொறுமையுடன் அமர்ந்திருக்கச் சொல்லும்போது நாம் அமர்ந்திருந்து இவ்விதமாக நமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழும்பும் ஆவியானவரின் ஒவ்வொரு பரிசுத்த உணர்த்துதல்களுக்கும் மறுப்பும், தாமதமுமின்றி நாம் கீழ்ப்படியவேண்டும். தமது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிகிற மக்களுடன் தேவன் பேசுவார். அவரது அமர்ந்த மெல்லிய குரல்கள் அம்மக்கள் தங்கள் உள்ளங்களில் அடிக்கடி ஒலிப்பதைக் கேட்பார்கள்.

கர்த்தருடைய வார்த்தைகளை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் நேசித்து அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கிற, நடக்கப் பிரயாசப்படுகிற தேவ மக்களுக்கு அவருடைய பாதாரவிந்தங்கள் தேனிலும் இனிமையாயிருக்கும். எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் பரம தகப்பனோடு அம்மக்கள் பேசி உறவாடி மகிழ்ந்துகொண்டு அவருடைய பாதங்களைக் கண்ணீரால் நனைத்துக்கொண்டிருக்கலாம். அந்த அருமை மக்களுக்கு வேதம் நாள் முழுவதும் நல் தியானமாயிருக்கும் (சங். 119:97) அவர்கள் வேதத்தை அதிகமதிகமாக நேசித்து, வாசித்து அவற்றை இருதயத்தில் பதியவைத்துக் கொண்டிருப்பார்கள். (11) அதினால் அவர்கள் பாவஞ் செய்யமாட்டார்கள். அவற்றை அவர்கள் மிகுதியும் நேசிக்கின்றபடியால் அவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு (165) அவர்களுக்கு இடறலில்லை.

அன்பார்ந்த ஆண்டவருடைய பிள்ளையே, பரிசுத்தரின் வசனங்களுக்கு நீ கீழ்ப்படிந்து ஜீவிக்கின்றாயா? "அவர் உனக்கு என்ன சொல்லுகின்றாரோ அதின்படி நீ செய்யும்பொழுது" (யோவா. 2:5) உனது வெறுமையும் பாழுமான வாழ்க்கை, ஏமாற்றமும் தோல்வியும் நிறைந்ததான உனது பாவ வாழ்க்கை, மிகுதியும் ஆசீர்வதிக்கப்பட்டதோர் வாழ்க்கையாக மாற்றம் பெறுவதை நீ திட்டமாகக் காண்பாய். உனது பரிசுத்த வேதாகமத்தை இன்றே உன் கரத்தில் எடுத்துக்கொண்டு "என் அன்பின் இயேசுவே, உமது பரிசுத்த வசனங்களை நான் அதிகமாக நேசித்து அவற்றிற்குக் கீழ்ப்படியவும், அவற்றின்படி ஜீவிக்கவும் எனக்கு உதவிசெய்யும், என்னைப் பெலப்படுத்தும்" என்று நீ ஜெபி. கர்த்தர் உனக்கு உதவிசெய்வார். உன் வாழ்க்கையில் ஒரு பரிசுத்தத் திருப்பத்தை நீ காண்பாய்.

"...ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்" (ஏசா. 66:2) என்று தேவன் கூறுகின்றார். கர்த்தருடைய வசனங்களுக்கு நடு, நடுங்கிக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும் வாழ்க்கையே மெய்யான பரிசுத்த வாழ்க்கையாகும். யார், யாருடைய வாழ்க்கை தேவனுடைய பரிசுத்த வசனங்களின் மேல் கட்டப்படுகின்றதோ அதுவே நித்திய

நித்தியமாக நிலைத்து நிற்கும். இங்கும், பரலோகிலும் அது அசையாத நித்திய அஸ்திபாரமுடையதாயிருக்கும்.

சமீபத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு பரிசுத்தவானுடைய ஜீவிய சரிதையை நான் வாசித்துக்கொண்டிருந்தேன். ஏசாயா 66:2-ம் வசனமே அவரது வாழ்க்கையின் குறிக்கோள் வசனமாகும். தனது ஜீவ கால முழுமையும் தேவனுடைய வசனங்களுக்கு அவர் கீழ்ப்படிந்து ஜீவித்து வந்திருக்கின்றார். அவர் மரிப்பதற்கு முன்பே தனது கல்லறையில் "தேவனுடைய வசனத்துக்கு நடுங்கின ஒரு மனிதன் இங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளான்" என்று தனது கல்லறையில் எழுதும்படிக் கேட்டுக்கொண்டார்களாம். அல்லேலூயா.

"HERE LIES THE BODY OF A MAN
WHO TREMBLED AT THE WORD OF GOD"

(Isaiah 66 2)

தேவனுடைய வசனத்தின்மேல் கட்டப்படும் ஜீவியம், தேவனுடைய வசனங்களுக்கு நடு, நடுங்கி அவற்றின்படிக் கீழ்ப்படிந்து ஜீவிக்கும் ஜீவியம் அதுவே கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டு ஆசீர்வாதம்பெறும் ஜீவியமாகும்.

கர்த்தர் வருகிறார். N. சாமுவேல்.

கர்த்தாவின் பிள்ளையே உனக்குக் கவலைவேண்டாம்

அநேக ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நடு இரவு வேளையில் பாதிரியார் ஒருவர் உலகத்தை ஆண்டுகொண்டுள்ள பற்பலவிதமான தீச்செயல்களை எண்ணித் தனது படுக்கையில் உட்கார்ந்து பெருங்கவலைப்பட்டுக்கொண்டிருந்தாராம். இரவில் வெகு நேரம் வரை இவ்விதக் கவலையில் மூழ்கியிருக்கும் வேளையில் "பாதிரியே, இனி நீ தூங்கச்செல், எஞ்சியுள்ள இரவில் உனக்காக நான் உட்கார்ந்து கொள்ளுகின்றேன்" என்றதான ஓர் தேவ சத்தத்தைத் தான் கேட்டதாக ஓர் சரித்திரம் கூறுகின்றது.

கவலை ஓர் கருணையற்ற அரக்கன். குழப்பங்களையும், பிரச்சினைகளையும்விடக் கவலையே சாவுக்கேதுவானதாக உள்ளது. கவலைக்குத் தங்களை ஒப்புவித்துவிட்டவர்கள் அதனுடனேயே ஓட்டிக்கொண்டுவிடுகின்றனர். கவலை ஒரு நடைமுறைப் பழக்கமாகிவிட்டால் அதனைப் பின்னர் துண்டிப்பது அத்தனை எளிதாகாது. இந்தத் துர்ப்பழக்கத்தை மனம் ருசி கண்டுகொண்டால் தொடர்ந்து அது கவலைக்குரிய காரியங்களையே உற்று நோக்கிக் கொண்டிருக்கும். கவலையின் ஒரு நூதனமான இரகசியமிது. தனது இனத்தவனுன

பயம் என்ற சகோதரனைப்போலவே கவலையும் எந்த மருந்தாலும் குணமாக்கக்கூடாத ஒன்ருகும்.

கவலை தனது அலங்கோலமான அடிச்சுவடுகளை ஒரு மனிதனின் நெற்றிப்பட்டத்தில் பதித்து அவனது அலங்காரமான மனுஷீகத்தை மாசுப்படுத்திச் செல்லுகின்றது. மனித சரீரத்தின் நுண்மையான நரம்பு மண்டலத்தில் அது தன் கைவரிசையை காண்பித்துப் புத்தியைக் குழப்பம் செய்யும் மனநோய்களைப் பாலூட்டிப் போஷித்து வளர்க்கின்றது.

"உங்கள் ஜீவனுக்காகக் கவலைப்படாதிருங்கள்" (மத். 6:25) என்று தேவனுடைய பிள்ளைகள் போதிக்கப்பட்டிருக்கிருர்கள். "உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவா. 14:27) என்றும் தேவன் அவர்களுக்குக் கற்பித்திருக்கின்ருர்.

"கவலைப்படாதே" என்று இயேசு கூறுகின்ருர். கவலையை எடுத்துக்கொண்டால் அதின் 30 சதவீதம் கடந்த காலத்தையும், 10 சதவீதம் நிகழ் காலத்தையும், 60 சதவீதம் எதிர் காலத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கும். கடந்த காலத்தில் நிகழ்ந்துவிட்ட ஒரு காரியத்தை இப்புவியில் யாராகிலும் மாற்றக்கூடுமோ? இல்லை. அது ஆணித்தரமாக நிலைபெற்றுவிட்டது. அப்படியானுல் கடந்தவற்றிற்காக நீ ஏன் கவலைப்படுகின்ருய்? ஒருவேளை நீ உன் தேவனுக்கு விரோதமாகத் துரோகம்பண்ணி, ஒரு மாபெரும் பாவத்தை அவர் சமூகத்தில் செய்துவிட்டு அந்தப் பாவ அங்கலாய்ப்பை நீ சுமந்து திரியலாம். ஆயினும், நீ மெய்மனஸ்தாபத்துடன் உன் பாவங்களைக் கர்த்தரின் சமூகத்தில் அறிக்கையிட்டு அவருடைய மன்னிப்புக்காகக் கெஞ்சுவாயானுல் உன் பாவ ரோகத்தைத் தம் திரு இரத்தத்தால் கழுவிச் சுத்திகரிக்க அவர் ஆயத்தமுள்ளவராயிருக்கிருர். இப்படிச் செய்யும்பொழுது உனது கவலையின் 30 சதவீதம் மறைந்து போய்விடும். பரிசுத்த பவுல் இதைக் குறிப்பிடுகையில் "பின்னுனவைகளை மறந்து, முன்னுனவைகளை நாடி" (பிலி. 3:14) என்று கூறினுர். கடந்த காலத் தோல்விகளை இன்றைய நல் வாழ்விற்கான படிக்கற்களாகக் (Stepping Stones) பயன்படுத்திப் பிரகாசமான எதிர்காலத்தை அமைக்கலாம். அப்போஸ்தலனுகிய பேதுரு இதைத்தான் செய்தார். கடந்த காலத்தை நாம் அறிவோம். நிகழ்காலம் நமக்கு இரகசியமானதல்ல. ஆனுல், வருங்காலத்தில் என்ன நிகழும் என்ற மனப்போராட்டம்தான் ஒரு பிடிவாதக்காரனுய் நம்மனதைப் பற்றுகின்றது. ஒருபாலத்தண்டை செல்லுமுன்பே அதனைக் கடக்க முயற்சிப்பது மதியீனமல்லவா? பாலம் ஆற்றின் குறுக்காக இருப்பதை நீ நன்கறிந்திருந்தும் அது ஒருவேளை இப்பொழுது அங்கிருக்காதோ என்று நீ வீண் மனக் கவலை கொள்ளுகின்ருய். நாளைக்காக நீ ஏன் கவலைப்படுகின்ருய்?

உன் வாழ்வில் ஒருவேளை நாளை வராமற்போகலாமே! ஆனால், இன்றைய தினம் உனக்கு முன்பாக உள்ளது. அதை முற்றுமாக வாழ்ந்து முடித்துவிடு. கவலைப்பட்டுக் கண்ணீர்விட்டு அதின் ஒரு சிறு பகுதியைத்தானும் நாசம் பண்ணிவிடாதே.

"ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத் தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத். 6:34) என்று இயேசு சொன்னார். நாளைக்குரிய பிரச்சினைகள் உன்னைச் சந்திக்கும்வேளையில் நீ அவற்றைத் தளராத மனமுடனும், கவலையற்ற உறுதியுடனும், விறைப்பற்றச் சூழ்நிலையில் வெற்றியுடனும் சந்திக்கவேண்டிய கிருபைகளைக் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளுவாய்.

இப்படிப்பட்டக் கவலைகளை இயேசு நன்கறிவார். எனவேதான் நம்மை வழிநடத்தவும், நமக்கு ஆலோசனை சொல்லவும், நாம் அறியவேண்டிய காரியங்களை அறிந்துகொள்ளவும் தேற்றரவாளனாகிய பரிசுத்தாவியை நமக்குத் தந்தருளினார். இன்னும் நாம் தொடர்ந்து கவலை கொள்ளுவோமானால், அதின் பொருள் என்னவெனில், "தேவனே நான் உமது பேரில் நம்பிக்கை கொள்ளவில்லை" என்பதுதான். இவ்விதமான அவநம்பிக்கை தேவனின் இருதயத்தை ஆழமாகக் காயப்படுத்துகிறது. தேவன் நமது வாழ்வின் நிலைகளை அறியக்கூடாத மதியீனம் கொண்டவரா? அவர் நம்மை உருவாக்கினது மெய்தானே? அகிலாண்டத்தை அவர் அரசாட்சி செய்துகொண்டிருக்கவில்லையா? வருங்காலத்தைக் குறித்த 60 சதவீதக் கவலைகளையும், கடந்த காலத்தைக் குறித்த 30 சதவீதக் கவலைகளையும் ஞானத்தோடு விட்டுவிட்டுக் கரங்களில் கிடைத்த இன்றைய தினத்தைநன் முறையில் பயன்படுத்திக்கொள்.

கவலை, சத்துருவிடமிருந்து வரும் ஓர் சோதனையாகும். கவலையை உருவாக்கும் பிரச்சினைகளை ஜெபத்தை உருவாக்கும் பிரச்சினைகளாக மாற்றிக்கொள். கவலையில் நீ முடிவான தீர்மானம் எடுக்கத் தேவன் உன்னை நடத்தும்படி அவரைக் கேள். அவருடைய வேதாகமத்தில் அதனைக்குறித்து வரையப்பட்ட வார்த்தையைக் கவனி. "உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்" (சங். 119:130)

தேவன் உன் பிரச்சினைகளுக்குத்தக்கதான வசனத்தை உனது இருதயத்தில் போடும்போது அது உனக்குச் சந்தோஷத்தையும், எல்லாப் புத்திக்கு மேலான தேவ சமாதனத்தையும் உனக்குத் தரும்.

சங்கடமான பாடுகள் நிச்சயமாக உன் வாழ்வில் எழும்பும். உனது வெற்றியும், தோல்வியும் அவற்றில் நீ மேற்கொள்ளும் தீர்மானங்களைப் பொறுத்ததாகும். உன்னைச் சந்திக்கும் எந்த ஒருகவ

மேற்கு தீபெத் (லடாக்) சுவிசேஷ ஊழியச் செய்திகள்.



புது டில்லியிலிருந்து இரவு சுமார் 7.30 மணிக்கு ஜீலம் எக்ஸ்பிரஸ் ரயிலில் ஏறி ஜம்முவை நோக்கிப் புறப்பட்டேன். டில்லி ரயில் நிலையத்தில் கர்த்தருடையபிள்ளை ஒருவர் வந்திருந்து ஜெபத்தோடு என்னை வழி அனுப்பிவைத்தார்கள் ரிசர்வேஷன் செய்யப்பட்டப்பெட்டியாகவிருந்தபோதிலும் அநேகர் உள்ளே நுழைந்து இடங்களைப்பிடித்து அமர்ந்துகொண்டனர். சிலர் மேலே ஏறிப் படுத்துக்கொண்டனர். சிலர் சீட்டு விளையாடத்தொடங்கினர் முரட்டாட்டமான அந்த வட இந்திய மக்களை யாரால் தட்டிக்கேட்கமுடியும்? இரவு சுமார் 10 மணிக்குப் பின்னர் கூட்டம் கொஞ்சம், கொஞ்சமாகக் கலைந்து சென்றது.

எனது இருக்கை (Seat) மிகவும் வசதியாகக் கீழே இருந்தது. ஆனால், என்னுடன் பயணம்செய்த இரு நடுத்தர வயதுடைய முரட்டுமனிதர் என்னை மேலே ஏறிப்போய்ப் படுத்துக்கொள்ள வற்புறுத்தினர். நான் சாந்தமாக எனது படுக்கை கீழேதான் கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறியபோது அவர்களில் ஒருவன் என்னைச் சினந்துகொண்டு "நீ மேலே ஏறிப் படுத்துக்கொள்" (You go and sleep there) என்று ஆங்கிலத்தில் கூறினான். அவனுடைய விருப்

லையையும் வெகு எளிதான விசுவாசத்தைக் கொண்டு கொன்று அதின்மூலம் நம் அருமை மீட்பர் இயேசுவின் உள்ளத்தை மகிழ்ச்சியுறச் செய்யலாம். (James C. Ervin)

பத்தின்படி பெட்டியின்மேல் ஏறிக் கர்த்தரைத் துதித்துக்கொண்டு படுத்துவிட்டேன்.

"அவர் கர்த்தர்; அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக". (1சாமு. 3:18)

தாவீது ராஜா தன் குமாரனாகிய அப்சலோமுக்குப் பயந்து அழுதுகொண்டே வெறுங்காலால் ஒலிவமலையின்மேல் ஏறிச்சென்ற போது கேராவின் குமாரனாகிய சீமேயி அவரைத் தூஷித்துக் கற்களை அவர்மேல் எறிந்தபோது "தாவீதைத் தூஷிக்கவேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார்" என்று கூறிய தாவீது ராஜாவின் வார்த்தைகளைத்தான் நானும் நினைவுகூர்ந்துகொண்டு படுத்திருந்தேன்.

என்னை மேலே ஏறிப் படுக்கச்சொல்லும்படிக் கர்த்தரே அந்த முரட்டாட்டமுள்ள மனிதர் இருவருக்கும் சொல்லியிருக்கிறார் என்று நான் என் உள்ளத்தில் எண்ணிக்கொண்டேன்.

வண்டி பதான்கோட் என்ற பட்டணத்திற்கு வருவதற்குச்சற்று முன்பாக அதிகாலையில் நான் கண் விழித்தபோது வெளியே பலத்த மழை பெய்துகொண்டிருப்பதையும், வண்டி முழுவதும் ஒரே தண்ணீராக நிரம்பியிருப்பதையும் நான் கண்டேன். எனது ஆசனத்தில் கீழே படுத்திருந்த மனிதன் இராமுழுவதும் பெய்த மழையில் எவ்வளவாய் கஷ்டம் அனுபவித்துத் தூக்கமின்றி அல்லல் அடைந்திருப்பான் என்பதை அப்பொழுது என்னால் நன்கு அறிந்துகொள்ள முடிந்தது. பஞ்சாப், ஹரியானா மாநிலங்களை ஜூலை மாதம் வெள்ளத்தால் தாக்கிப் பலமாகச் சேதமுறப்பண்ணிய பயங்கரமழை அதுவேதான். இரவில் என்னை அமைதியாக இளைப்பாறப்பண்ணிய அன்பின் கன்மலைக்கு நன்றிப்பெருக்கான உள்ளத்துடன் துதி செலுத்தினேன். அவரது அன்பின் மகத்துவத்தை யாரால் அறியக்கூடும்? அடுத்துவந்த பகற்காலத்தில் முதலில் குறிப்பிட்ட மனிதர் இருவருடனும் நன்கு பழகி ஹிந்திமொழியில் எழுதப்பட்ட சுவிசேஷத் துண்டுப்பிரதிகளைக் கொடுக்கக் கர்த்தர் உதவிபுரிந்தார். அவருடைய பரிசுத்தநாமத்திற்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

என்னுடைய பெட்டியில் டில்லியிலுள்ள பெரிய வங்கி ஒன்றில் பணிபுரியும் ஒரு வட இந்திய வாலிபனும், அவரது மனைவியும் எனக்கு மிகவும் அறிமுகமானார்கள். ஆண்டவர்தான் இந்த இணைப்பைத் தந்தார் என்று நான் விசுவாசிக்கின்றேன். தேவனுடைய சுவிசேஷத்தை எளிதில் அன்புடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய நல்ல பணிந்த இதயம் இம்மக்களுக்கிருந்ததைக் கண்டேன். செல்வந்தர்களான அவர்கள் பற்பசையைத் (Tooth paste) தங்களுடன் கொண்டுவர மறந்துவிட்டபடியால் என்னிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. இதைத் தொடர்ந்து எங்கள் நட்பு வலுப்பெற்

றது. சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தேவனின் நற்செய்திப் பிரதிகளை அவர்களுக்களித்து அவர்களது முகவரியைப் பெற்றுத் தொடர்புகொண்டு வருகின்றேன். வரும்நாட்களில் அவர்களுக்கு அனுப்பப்படவிருக்கும் புத்தகங்கள், முதலானவற்றின்மூலமாக ஆண்டவர் இம்மக்களோடு பேசும்படியாக அன்புடன் ஜெபித்துக்கொள்ளுங்கள். அந்த வாலிபனது பெயர் ராக்கேஷ் திரிபாதி என்பதாகும்.

ஜலம் எக்ஸ்பிரஸ் சரியாக நண்பகல் வேளை ஜம்மு ஸ்டேஷனுக்குள் வந்தது. மழையோ விட்டபாடில்லை. தூறிக்கொண்டேயிருந்தது.

ஜம்மு இந்துக்களின் புண்ணிய ஸ்தலமாகவும் உள்ளது. பட்டணத்தின் நடுவாக மிகப்பெரிய இந்துக் கோயில் தங்கம்போல் மின்னிக்கொண்டு இந்து யாத்திரீகர்களை அழைக்கின்றது. அதைப் பார்க்கப் பார்க்க என் உள்ளம் எனக்குள்ளாக அங்கலாய்த்தது. எனது பெட்டியில் என்னுடன் பிரயாணம் செய்த அநேகர் இந்து யாத்திரீகர்கள்தான். ஜம்மு ஒரு பெரிய நகரம். மலையின்மேல் 1000 அடி உயரத்தில் இது அமைந்துள்ளது.

ஜம்முவில் எனது நண்பகல் ஆகாரத்தை முடித்துக்கொண்டு திரும்பிச் செல்லுவதற்கான எனது ரயில்வே ரிசர்வேஷனை ஒழுங்குபடுத்திவிட்டு உதம்பூர் என்ற இடத்தை நோக்கிப் புறப்பட்டேன். உதம்பூர் ஜம்முவிலிருந்து 41 மைல்கள் தூரத்திலுள்ளதோர் இடமாகும். அழகான மலை ரஸ்தா மார்க்கத்தில் இது உள்ளது. இது ஒருபெரிய ராணுவ கேந்திர ஸ்தானமாகவும் விளங்குகின்றது. பண்டைய நாட்களில் காஷ்மீரை ஆண்ட அரசர்கள் இங்குள்ள கானகங்களுக்கு வந்து வேட்டையாடியதாகக் கூறப்படுகின்றது. ஜம்முவிலிருந்து பஸ்ஸில் புறப்பட்டு சூரிய அஸ்தமன வேளையில் நான் உதம்பூர் வந்து சேர்ந்தேன். Kashmir Evangelical Fellowship என்ற சுவிசேஷ ஊழிய ஸ்தாபனம் இங்குதான் உள்ளது. இதன் ஸ்தாபகரான Bro P M. தாமஸ் அவர்களும் அவர்களது மனைவியும் எனக்குப் பாராட்டிய அன்பு கொஞ்சமல்ல. கர்த்தருடைய மட்டற்ற அன்பின் இரக்கத்தால் செக்கந்திராபாத்திலிருந்தும், பெங்களூரிலிருந்தும் நான் ஏற்கெனவே ஒழுங்கு செய்திருந்த திபெத் மொழிக் கைப்பிரதிகளும், புத்தகங்களும் நான் கொடுத்திருந்த எண்ணிக்கைக்கு மிகவும் மேலாக இங்கு பத்திரமாக வந்து சேர்ந்திருந்தன. அதற்காக ஆண்டவரை நான் உளமார ஸ்தோத்தரித்தேன்.

ஆனால், அடுத்த கோணத்தில் என் உள்ளம் கவலையால் சோர்ந்துபோயிற்று. காரணம் என்னவெனில், பலத்த மழை ஒரு நிமிஷமும் விடாது பெய்துகொண்டிருந்தபடியால் எனக்கு வந்திருந்த பெரும் எண்ணிக்கையான திபெத் மொழிப் புத்தகங்கள் முத

லானவற்றைக் காஷ்மீருக்கு எப்படிக் கொண்டுசெல்லுவது என்பது ஒரு பெரிய சிக்கலான காரியமாகிவிட்டது. ஆண்டவர் சமூகத்தில் அழுவதைவிட எனக்கு வேறொன்றும் செய்யமுடியவில்லை. காஷ்மீர் செல்லச் செல்ல மழை இன்னும் அதிகமாயிருப்பதுடன் அப்படி இத்தனை பழுவான பிரதிகளைக் கொண்டு சென்றாலும் டாக்சிலும் இவற்றைக் கொண்டுசெல்ல அரசாங்க அதிகாரிகள் அனுமதிப்பது சந்தேகம்தான் என்றும் சொல்லப்பட்டது. இதைக் கேட்க, கேட்க என் நெஞ்சம் மட்டற்ற வேதனையால் நிறைந்தது. உதம்பூரில் இராமுழுவதும் மிகுந்த மனக்கிலேசத்துடன் படுத்திருந்தேன். விடியற்காலையிலேயே எழும்பி ஆண்டவரைச் சப்தமாகப் பாட்டுகளைப் பாடி என் அகங்குளிர அந்தக் கருணைக் கடலான தேவனை ஸ்தோத்திரித்தேன். பாடுகள், பிரச்சினைகள், துயரங்கள், கண்ணீர் சமயங்களில் துதியின் ஆயுதத்தைத்தான் நாம் பயன்படுத்தவேண்டும். அன்று காலையில் நான் வேதாகமத்தைத் திறந்தபோது "...கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து ..." (ஏசா 25:8) என்ற ஆறுதலான வசனத்தை தேவன் எனக்குத் தந்தார். அந்த வார்த்தைகளைத் தேவன்தாமே என்னிடம் நேரில் கூறுவதைப் போலிருந்தது.

உதம்பூருக்கு வந்திருந்த தீபெத் மொழிக் கைப்பிரதிகளில் மிக முக்கியமான பெரும் பகுதியை ஒரு பெரிய அட்டைப் பெட்டியில் பிளாஸ்ட்டிக் காகிதங்களில் சுற்றிவைத்து மழைத் தண்ணீர் உட்புகாமல் மிகவும் பத்திரமாகக் கட்டி எடுத்துக்கொண்டு ஒரு பகுதியை உதம்பூரிலேயே விட்டு விட்டுச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்காக நான் சொல்லொண்ணு வேதனையுற்றேன். ஆனால், இந்தக்காரியங்கள் யாவையும் தேவன் எந்த, எந்த முறைகளில் நன்மையாக முடியப்பண்ணித் தமது பரிசுத்தமுள்ள நாமத்தை மகிமைப்படுத்தினர் என்பதை நான் பின்னர் எழுதும்போது நீங்களும் என்னுடன் சேர்ந்து ஆண்டவரை உளமார ஸ்தோத்திரிப்பீர்கள். அல்லேலூயா. "கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்" (சங். 126:5) என்று ஆண்டவர் எனக்கு ஆரம்பத்தில் அளித்த வாக்குத்தத்தத்தை உதம்பூரில் வைத்துத்தான் நான் அதிகமாக நினைவுகூர்ந்தேன்.

உதம்பூர் சென்ற அன்று மாலையிலேயே மறுநாள் காலை காஷ்மீர் செல்லுவதற்கான எனது பயணச் சீட்டை பஸ்ஸில் ரிசர்வ் பண்ணிக்கொண்டேன். ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் நாம் நமது டிக்கெட்களை முன்பதாகவே பதிவு செய்யாவிடில் பஸ்ஸில் பயணம் செய்ய முடியாது. இரவு முழுவதும் கடுமையான மழை பெய்திருந்ததுடன் காலையிலும் மழை சிறிதும் நிற்கவில்லை. மழையோடு மழையாகவே மிகுந்த ஜெபத்துடன் புறப்பட்டுச் சென்றேன். முதலில் குறிப்பிட்ட ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஓர் அன்பான தேவப்

பிள்ளை என்னுடன் பஸ் நிலையத்திற்கு வந்திருந்து மழையில் நனைந்துகொண்டே எனக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்தார்கள்.

போகப்போக ஒரே மழைதான். பஸ்ஸின் மேலே போடப்பட்டிருந்த தேவனுடைய வசனங்களடங்கிய பெட்டியைக் குறித்துத்தான் என் உள்ளம் மிகவும் தத்தளித்துக்கொண்டிருந்தது. உறுதியான தார்பாலின் போட்டுப் பெட்டியை மூடியிருந்தபோதினும், கொட்டும் மழைக்கு முன்பாக அது எம்மாத்திரம்!

மழையை ஆண்டவர் நிறுத்தித் தரும்படியாக பஸ்ஸிலிருந்து ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். நான் "B" வகுப்பு பஸ்ஸில் சற்று குறைந்த கட்டணத்தில் பயணம் செய்தபடியால் பஸ் முழுவதும் ஒரே ஒழுக்காகவிருந்தது. சில மணிநேர பஸ் ஓட்டத்திற்குப்பின் மழை ஒருவாறு தேவ கிருபையால் நின்று போயிற்று. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இதற்கப்பால் பயணம் கர்த்தருக்குள் மிகவும் ஆசீர்வாதமாயிருந்தது. உயர்ந்த மலைகளும், தேவதாரு போன்ற மரங்கள் நிறைந்த ஆழ்ந்த பள்ளத்தாக்குகளும் சிருஷ்டிகர்த்தாவின் வலது கரத்தின் மகத்துவத்தை எடுத்துக் கூறுவதாயிருந்தன. அவற்றையெல்லாம் காணக், காண "கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது, அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்; பூமி உம்முடைய பொருட்களினால் நிறைந்திருக்கிறது" (சங். 104:24) என்ற சங்கீதக்காரரின் வார்த்தைகளைத் தான் நினைவுகூர்ந்தேன். என் உள்ளம் கர்த்தரைத் துதித்துக்கொண்டேயிருந்தது. ஜம்முவிலிருந்து காஷ்மீர்வரை ஒரே தொடர்ச்சியான மலைகள்தான்.

மத்தியானம் பனைஹால் என்றதோர் இடத்தில் நண்பகல் ஆகாரத்திற்காக பஸ்ஸை நிறுத்தினார்கள். இந்த இடம் பார்ப்பதற்கு மிகவும் மனோகரமாயிருக்கின்றது. இந்த இடத்திலிருந்து சில மைல்கள் தொலைவில்தான் உலகிலேயே அதி அற்புதமான 'பனைஹால்' சுரங்கப் பாதை உள்ளது. வருடத்தின் 12 மாதங்களிலும் பனி உறைந்து கிடக்கும் நித்திய பனி மலைகளுக்குக் கீழாக 7000 அடி உயரத்தில் மலைகளைக் குடைந்து 1 6 மைல் நீளத்திற்கு இந்தச் சுரங்கப் பாதையை அமைத்திருக்கின்றனர். இந்த உயரத்தில் சுரங்கப் பாதை உலகில் எங்குமில்லையாம். இதில் அடுத்தடுத்துப் போவதற்கும், வருவதற்குமான இரண்டு வழிகளை அமைத்துள்ளனர். இந்தச் சுரங்கப்பாதை மாத்திரம் இல்லாவிடின் காஷ்மீர் எல்லாக் காலங்களிலும் வெளி உலகுடன் தொடர்பு கொண்டிருக்க முடியாது என்று கூறப்படுகின்றது. ஏனெனில், பனிமலைகளிலுள்ள மாறுதலான சீதோஷ்ண நிலைகளிலும், கடுமையான மேகமூட்டங்களிலும் விமானம்கூடக் காஷ்மீருக்குச் செல்லக்கூடாத நிலை சில சமயங்களில் ஏற்பட்டுவிடுமாம்.

இந்தச் சுரங்கத்தைக் கடந்ததும் காஷ்மீர் பள்ளதாக்கு தெரிகின்றது. "உனது மனம் விரும்பும் எதையும் நீ செய்யலாம்" என்ற அறிவிப்புப் பலகை ஒன்று சுரங்கத்தைத் தாண்டியதும் முன்பு அங்கு நாட்டப்பட்டிருந்ததாகப் பஸ்ஸில் ஒரு பயணி கூறினார். என்னால் அதை நம்பக்கூடவில்லை. ஆனால் காஷ்மீரம் சென்றபோது அந்த வார்த்தைகள் ஓரளவு உண்மையாக எனக்குத் தெரிந்தது.

பனிஹால் சுரங்கத்தைப் பஸ் கடந்து வெளியே வந்ததும் மனித வர்ணிப்புக்கு அப்பாற்பட்ட மிகச் செழிப்பான காஷ்மீர் பள்ளத்தாக்கு வருகின்றது. பசுமை கொழிக்கும் வயல்வெளிகளும், பழத் தோட்டங்களும், தோப்புகளும், நீர் நிரம்பிய கால்வாய்களும், தண்ணீர்த் தடாகங்களும் 70 மைல்கள் தொலைவுக்குத் தென்படுகின்றது. தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு அளித்த பாலும், தேனும் ஓடுகிற கானான் தேசம்தானோ இது என்று நாம் எண்ணுகிற அளவுக்கு அதின் செழிப்பு அழகுற்றுக் கிடக்கின்றது. இந்தப் பள்ளத்தாக்கின் ஊடே பஸ்ஸில் பிரயாணம் செய்வது மனமகிழ்வை அளிப்பதாயிருக்கின்றது. இந்த அழகிலெல்லாம் நான் ஆண்டவரது மாட்சிமையின் கரத்தையே காண முடிந்தது. என் உள்ளம் சதா அவரையே ஸ்தோத்தரித்துக் கொண்டேயிருந்தது. மக்களைக் காணும்போதெல்லாம் அவர்களது விலையேறப்பெற்ற ஆத்துமாவின் விலை மதிப்பையும், மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்துபோன அவர்களின் பரிதாப நிலையையும் நான் கண்டு உள்ளமுருகினேன்.

வழியில் ஓர் தாய் தனது பாலகனைக் கூடை ஒன்றில் வைத்துத் தன் தலைமேல் தூக்கிச் சென்றுகொண்டிருந்தாள். தாயின் தலையின்மேல் சவாரி செய்த அப்பாலகன் கைகளை ஆட்டி அசைத்துச் சிரித்துக்கொண்டிருந்தான். தன்னைச் சுமப்பதினால் தனது தாயின் தலைஅழுத்துமே என்ற கவலை அப்பாலகனுக்கேது? அதைக் கண்டதும் உபாகமம் 1:31-க்கு என் உள்ளம் சென்றது. "ஒரு மனிதன் தன்பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிற வரைக்கும் நடந்துவந்த வழிகள் எல்லாவற்றிலும் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் கண்டீர்களே".

நான் சென்ற பஸ் காஷ்மீருக்கு இன்னும் சற்று தூரத்திலேயே வழியில் டீசல் இல்லாமல் நின்றுவிட்டது. இரண்டுமணி நேரத்திற்கும் அதிகமாக நின்றுகொண்டிருந்த அந்த நேரம் எனக்கு மிகவும் பயனுள்ள நேரமாக அமைந்தது. அப்பொழுது அடித்துக்கொண்டிருந்த வெயிலின் உஷ்ணத்தால் பஸ்ஸின்மேலே போடப்பட்டிருந்த கைப்பிரதிகவடங்கிய பெட்டி ஓரளவு நன்றாக உலர்ந்துவிட்டது.

இறுதியாக, மாலை மயங்கும்நேரம் நான் காஷ்மீரத்தின் தலை நகராகிய ஸ்ரீநகர் வந்தடைந்தேன். என் கவலையெல்லாம் பெட்டி ஒன்றில் தானிருந்தது. ஸ்ரீநகரில் நான் ஒரு கிறிஸ்தவப் பள்ளியிலுள்ள ஒரு பழைய அறையில் பணம் கொடுத்து தங்கியிருந்தேன். அங்கு நான் சென்று பெட்டியைத் திறந்தபோது கைப்பிரதிகள் ஒரு சேதமுமின்றி அப்படியே இருந்ததைக் கண்டு என் கன்மலையைத் துதித்தேன். அல்லேலூயா.

நன்ருக ஜெபிக்க அந்தப் பள்ளி அறை எனக்கு மிகவும் அனுகூலமாயிருந்தது. ஏனெனில், இரவில் படுத்து இளைப்பாறவிடாதபடி எலிகளும், பெரிய கருப்பு வண்டுகளும் என்னை மொய்க்கத் தொடங்கிவிட்டன. அன்பின் தேவன் எல்லாக் காரியங்களையும் தமது நாம மகிமைக்காக என்னைக்கொண்டு செய்தார். அவருக்கே அனைத்துத் துதியும் உண்டாவதாக.

N. சாமுவேல்.

நமது ஜெபங்களுக்குத் தேவனது தாமதம் ஏன்?

தேவபக்தியுள்ள ஒரு விவசாயியை நான் அறிவேன். தனது தொழிலில் அவர் திவாலாகிவிட்டார். தனது சக விவசாயிகள் நாணயமற்றமுறையில் நடந்துகொண்டமையால் அவர் தனது பண்ணையின் விளைபொருட்களை நல்லவிலைக்கு விற்கக்கூடாமற்போயிற்று கடன்காரர்களுக்கு நான்காயிரம் டாலர்கள் நாணயமாகக் கொடுத்துவிடவேண்டிய மிக அவசியமான சூழ்நிலை அவருக்குண்டாயிற்று. இதற்கிடையில் மேற்கண்ட விவசாயிக்கு ஐசுவரியமுள்ள தனவந்தன் ஒருவன் 5000 டாலர்கள் கொடுக்கவேண்டியதாயிருந்தது. இந்தத் தொகையைத் தனக்குத் துரிதமாக அனுப்பிவைக்கும்படியாக அந்த ஐசுவரியமுள்ள தனவந்தனுக்காக அவர் ஜெபித்தார்.

இந்நிலையில் விவசாயிக்குக் கடன்கொடுத்த கடன்காரர்கள் பணத்தைத் திருப்பித்தரும்படியாக அவரை நெருக்கத்தொடங்கினர்கள். அந்த விவசாயி தனக்கு வரவேண்டிய ஐயாயிரம் டாலர்கள் மிக விரைவில் கிடைக்கும்பொருட்டாகக் கர்த்தரைநோக்கி வெகு உருக்கமாக மன்ருடி ஜெபித்தார். எனினும், ஆண்டவரிடமிருந்து எவ்விதமான மாறுத்தரமும் அவருக்குக் கிடைக்கவில்லை. அவர் மிகவும் குழப்பமடைந்தார். உண்மையில் அவர் மிகவும் உதாரகுணமுள்ள இரக்கசாலி. தேவனை நேசித்தவர். ஆலயத்திற்கு ஒழுங்காகச் சென்றவர். ஏழைகளுக்கும், கஷ்டத்தில் சிக்கியவர்களுக்கும் மனங்கோணாது உதாரத்துவமாக அன்புடன் கொடுத்தவர். இப்படிப்பட்டதான ஒரு நற்குணசாலியின் துன்பநேரத்தில் தேவன் எதற்காக உதவியளிக்க முன்வரவில்லை.

கடன்காரர்கள் அவரை இன்னும் அதிகமாக நிர்ப்பந்திக்கத் தொடங்கினார்கள். அவர் எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஐயாயிரம் டாலருக்கான செக் (Cheque) வரவே இல்லை. இறுதியாக அந்த தேவ பக்தியுள்ள விவசாயி ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளில் தமது பண்ணையின் தளவாடங்கள், கையிருப்பிலுள்ள பொருட்கள் அனைத்தையும் விற்றுக் கடன்காரர்களின் கடன் தொகைகளை அடைப்பதாக உறுதி அளித்தார். ஏலம் விடுவதற்கான இறுதிநாளும் வந்தது. அந்த நாளின் தபாலிலும்கூட அவர் ஏக்கத்துடன் எதிர்நோக்கிக் காத்திருந்த செக் வரவே இல்லை. மனம் உடைந்து நொறுங்கிப் போன நிலையில், தான் நேசித்த தனது பண்ணையின் தளவாடங்களும், பொருட்களும் தனது கண்களுக்கு முன்பாக ஏலம்விடப்படுவதைப் பார்க்கச் சகிக்காமல் மகா துயரத்துடன் சில மைல்களுக்கப்பாலுள்ளதோர் இடத்திற்குச் சென்றுவிட்டார். தேவன் அந்த மனிதனின் ஜெபத்திற்கு உத்தரவு அருளவில்லை. ஏன்?

எந்த ஒரு கம்ப்யூட்டரும் (வினாடிப்பொழுதில் கணக்கிடும் பெரிய யந்திரம்) நமது வினாக்களுக்கு விடை அளிப்பதற்கு முன்னரே தேவன் நமது விண்ணப்பங்களுக்கு மாறுத்தரம் அளிப்பவர் என்ற திட்டமான நிச்சயம் நமக்குண்டு. நிச்சயமாகத் தேவன் எந்த கம்ப்யூட்டரையும் இது விஷயத்தில் மிஞ்சி நிற்கக் கூடியவராயிருக்கின்றார். அவர் சொல்லுகிறார் "அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்". (ஏசா. 65:24)

ஆழ்கடலில் மூழ்கி மடியப்போகும் வேளையில் பேதுரு ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டான். உடன்தானே அன்பின் தேவன் தமது கரம் நீட்டி அவனைத் தூக்கி மீட்டார். "ஆண்டவரே, உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்று அபயமிட்ட சிலுவைக் கள்ளனின் உருக்கமான விண்ணப்பத்திற்கு அந்நிமிஷமே மாறுத்தரம் அளித்தார். எனினும், தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரனுக்காக நமதுமுற்பிதாவாகிய ஆபிரகாம் வெகுகாலம் காத்திருக்கும்படியான நிலை ஏற்பட்டது. 20 ஆண்டு காலம் கடந்த பின்னரும் ஈசாக்கு பிறக்கவில்லை.

சாமுவேலின் தாய் அன்னாள் வாளி, வாளியாகக் (Bucket) கண்ணீர்சொறிந்து பல நூற்றுக்கணக்கான மணிநேரங்கள் ஜெபித்தும்கூடத் தனக்கு ஒரு குமாரன் வேண்டுமென்ற அவளது ஆவல் இன்னும் நிறைவு செய்யப்படாமலே தானிருந்தது. பஞ்சத்தால் நலிவுற்று, மழைக்காக மட்டற்ற ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்திருந்த தேசத்திற்காகத் தீர்க்கன் எலியா தேவனைநோக்கிக் கெஞ்சி மன்றாடின மன்றாட்டு ஒரே ஒரு தடவை மாத்திரமே உடனடியான பதிலைப்பெற்றதேதவிர அந்நிகழ்ச்சி பிறிதொரு தரம் நடக்கவில்லை.

மார்த்தாளும், மரியாளும் தங்கள் சகோதரனாகிய லாசரு மரணத்திற்கேதுவான வியாதியாயிருக்கின்றான் என்று இயேசுவுக்குத் தகவல் அனுப்பினார்கள். ஆனால் இயேசு உடனே புறப்பட்டுச் செல்லவில்லை. லாசரு மரிப்பதற்குப் போதுமான இரண்டு நாட்களை யோர்தானுக்கு அப்பால் தங்கிச் செலவிட்டார். நமதருமை ஆண்டவரின் மானிடவதார நாட்களான அந்த ஆரம்ப நாட்களிலேயே ஜெபத்திற்கான பதிலை அவர் எப்பொழுதும் உடனேயே அளிக்கவில்லை.

நம்முடைய ஜெபங்களுக்கு உடன்தானே பதில்வரத் தாமதிக்கின்றது என்பதை நாம் காண்போமானால் முதலாவது நாம் நம்மை ஆராய்ந்து பார்க்கவேண்டும். என்னிடத்தில் அக்கிரம சிந்தை ஏதேனும் உண்டுமா? (சங். 66:18) சந்தேகம், அவிசுவாசம் என்னில் உண்டா? (யாக். 1:6) தேவ சித்தத்திற்கு மாறான விதத்தில் ஜெபிக்கின்றேனா? (1யோவா. 5:14:15 கீழ்ப்படியாமை என்னிலே உண்டா? (1யோவா. 3:21,22) சுயநலத்தை மையமாகக்கொண்ட ஜெபமா? (யாக். 4:3) மன்னிக்க மனமற்ற ஆவியா? (மத். 6:14) தாழ்வான, இரக்கமற்ற இழிசிந்தை எதுவும் என்னில் உண்டா? (நீதி. 21:13) ஜெபத்திற்குத் தடையாயிருக்கக்கூடிய இவ்விதமான பாவசுபாவங்கள் எதுவும் இல்லாதிருந்தும் தேவன் எதற்காக நமது ஜெபங்களுக்குப் பதில் அளிப்பதில் தாமதம் காண்பிக்கின்றார்?

தேவனது தாமதமானது நமது ஜெபங்களுக்குப் பதில் அளிக்கக்கூடாது என்பதைக் குறிக்கும் அவரது விருப்பமற்ற சிந்தையா? அல்லது நாம் கேட்கக்கூடியதான காரியம் சரியானதாகவிருந்த போதினும் அதனைப் பெற்றுக்கொள்ளவேண்டிய காலம் தவறான காரணத்தினாலா?

எத்தனைதான் கெஞ்சி, மன்றாடி அழுது விரும்பினாலும் 5 வயது டாரதிக்கு அவளுடைய பரிசோதனைக்காக நாம் ஒரு நெருப்புக்குச்சிகளுடன் கூடிய நெருப்புப் பெட்டியொன்றைக் கொடுக்கமாட்டோம். பொம்மைக்குப் பதிலாக முகச்சவரம் செய்துகொள்ளக்கூடிய சவரகன் கத்தியை 5 வயது ஜேம்ஸ்க்குக் கொடுப்பதில்லை. முற்றும் பொன்னாலான கைக்கடிகாரத்தை ஆறு வயது டோனல்டுக்கு அளிக்க விரும்பமாட்டோம். நெருப்புப் பெட்டிகளும், சவரகன் கத்திகளும், தங்கக் கடிகாரங்களும் மேலான பயனுடையவைகள். எனினும், நமது பிள்ளைகள் அவற்றை நம்மிடம் கேட்கையில் அவைகளைக் கொடுப்பதில் தாமதம் காட்டுகின்றோம். அந்தத் தாமதம் நமது பிள்ளைகளுக்கு நன்மை பயக்கும் என்பதை நாம் நன்கறிவோம்.

ஆப்பிரிக்காவில் மிஷனறியாகப் பணிபுரிந்த எலினார் வாக்னர் அம்மையார் குடல் வியாதியால் மிகவும் துயருற்றார்கள். மருத்துவ வசதிகள் எதுவும் அவர்களுக்கு அருகாமையில் இல்லை. நல்ல ஆகா

ரம் சாப்பிட அவர்களுக்கு மிகவும் ஆவலாயிருந்தமையால் கையிலி ருந்த பணத்தை எல்லாம் செலவழித்து நல்ல ஆகாரத்தை உட் கொண்டார்கள். இதற்கிடையில் மாதா மாதம் வரக்கூடிய பணம் அவர்களது நாட்டிலிருந்து அம்மையாருக்கு வரவில்லை. ஆண்டவ ரிடம் எவ்வளவோ கெஞ்சி மன்றாடிய போதினும் ஒன்றும் வரவே இல்லை. பணம் வராத காரணத்தால் ஏறத்தாழ 30 நாட்களாகச் சுவையற்ற ஓட் அடையையும் (Oat Meal) ஆடை நீக்கிய பாலையுமே அவர்கள் சாப்பிடவேண்டிய நிலை எழுந்தது. இறுதியாகப் பணம் வந்துசேர்ந்தது.

அம்மையார் லீவில் தனது நாட்டிற்குச் சென்றிருந்தபோது தனக்குக் கிடைத்த சுகத்தைப்பற்றிக் கீழ்க்கண்டவாறு ஒரு கூட் டத்தில் கூறினார்கள்.

தனக்குச் சுகம் கிடைத்ததற்குப் பின்னர் ஒரு டாக்டர் அவர் களிடம் அவர்களது வயிற்று வலியின் இயல்பைக் குறித்து வின வினார் என்றும் வியாதியின் மூலக்கூறுகளைக் கேட்ட அந்த டாக்டர் "பணம்வரத் தாமதமான காரணத்தாலேயே நீங்கள் உயிர்பிழைத் தீர்கள். 30 நாட்கள் ஓட் அடை ஆகாரம் மரணத்திற்கேதுவான உங்கள் வயிற்று வியாதிக்குக் கைகண்ட ஒளஷதம்" என்று கூறினாராம்.

உனது ஜெபங்களுக்குப் பதில் வரத் தாமதிப்பது அநேக நன் மைகளை உனக்குக் கொண்டு வருவதற்கு ஏதுவாகவிருக்கும் என் பதை நீ மறந்துவிடாதே. ஆண்டவருடைய தாமதத்தை நீ ஒரு போதும் தவறாகப் புரிந்து கொள்ளவேண்டாம், அந்தத் தாமதம் உன்னை இன்னும் பரிசுத்தத்திற்கும், இன்னும் உறுதியான விசு வாச நிலைக்குள்ளும் உன்னை வழிநடத்தும். அந்த தாமதம் உனது ஆவிக்குரிய வாழ்வினை இன்னும் உறுதியாகக் கட்டி உன்னை ஓர் முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவ நிலைக்கு வழிநடத்தும்.

ஒரு கிறிஸ்தவ மனிதன் தனது அமெரிக்க ஐக்கிய நாட்டுப் படைகளில் சேர்ந்து ஐரோப்பாவில் பணிபுரிந்து கொண்டிருந்தான். இரண்டு மாதங்களுக்கு முன்புதான் ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டதையடுத்து ஜெர்மனி வீழ்ச்சியுற்றிருந்தது. அந்தக் கிறிஸ் தவ இராணுவ வீரன் துரிதமாகத் தனது சுயதேசம் திரும்பவும், தனிமையாயிருக்கும் தன்னுடைய இளம் மனைவியையும், தான் யுத் தத்திற்குப் புறப்படுகையில் சிசுவாகவிருந்த தனது மகனையும் பார்க்கவேண்டுமென்ற மட்டற்ற ஆவலில் ஆண்டவரை நோக்கி உருக்கமாக மன்றாடினான்.

ஆனால் நடந்தது என்ன? காலக்கெடு எதுவுமின்றி ஜப்பான் நாட்டில் தனது அமெரிக்க ஐக்கிய நாட்டுப் படையில் பணிபுரிய வேண்டுமென்று அரசாங்கம் அவனுக்குக் கட்டளை பிறப்பித்தது. அவன் அப்படியே ஸ்தம்பித்துப்போனான்.

15 ஆண்டுகளுக்குப் பின்னர் அப்பொழுது நல்ல முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவனும், கிறிஸ்துவைப் பிரதிபிம்பிக்கக்கூடிய வளர்ச்சியுள்ள நிலையில் காணப்பட்ட அந்தக் கிறிஸ்தவன் தனது கடந்தகால நிலையை விளக்கினுன்.

“அந்தத் தாமதமானது எனது கிறிஸ்தவ விசுவாச வாழ்வின் அடித்தள அஸ்திபாரத்தையே குலுக்கி அசைத்துவிட்டது. எனினும், நான் ஜப்பான் நாட்டில் இருந்த காலத்தில் தேவனைக்குறித்து அதிகமாக அறிந்துகொண்டது மாத்திரமல்ல, அவர் என்னை மிக அதிகமாக நேசிக்கின்ருர் என்பதனையும் திட்டமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. இதுவரையான எனது வாழ்க்கையில் நான் ஆண்டவரை அப்படி அறிந்துகொண்டதே இல்லை. தேவனைமாத்திரம் முழுவதும் சார்ந்து நிற்கும் உன்னத ஆவிக்குரிய நிலையையும் அந்த நாட்களில்தான் நான் கண்டுகொள்ளமுடிந்தது” என்று கூறினுன்.

ஈசாக்கின் பிறப்பினிமித்தம் எதற்கும் தேவனை விசுவாசிக்கும் மேன்மையான நிலையை ஆபிரகாம் கற்றுக்கொண்டார். இதன் காரணமாகவேதான் உயிர்த்தெழுதலையே அறியாதிருந்த அக்காலத்திலேயே தன்குமாரனுகிய ஈசாக்கைத் துணிந்து பலியிட்டாலும் தேவன் அவனை நிச்சயமாக உயிரோடே எழுப்புவார் என்ற உறுதியான பரிசுத்த நம்பிக்கை அவருக்குண்டாயிற்று.

சாமுவேல் பிறந்தபோது தேவன் பேரிலுள்ள அன்னுளின் பக்தி இன்னும் ஆழமாக வேர்பிடித்து நின்றது. இதன் காரணமாகத் தனது மைந்தனை கர்த்தருடைய ஆலயத்தின் நீண்ட காலத் திருப் பணிவிடைக்கே அர்ப்பணித்துவிட்டாள்.

நமது ஜெபத்திற்கான காலதாமதம் நம்முடைய பிரச்சினைகளுக்கு நாம் தேடும் பரிகாரத்தைவிடத் தேவனது பரிகாரமே மேன்மையானதொன்று என்று சுட்டிக் காண்பிக்கும் குறிமுள் (Pointer) போன்றதாயிருக்கின்றது.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட விவசாயியினது காரியத்தை மீண்டுமாகக் கொண்டு வருகின்றேன். தன்னுடைய பண்ணையின் பொருட்கள் யாவும் தனது கண்களுக்கு முன்னர் ஏலம்விடப்படுவதைக் காண மனம் சகிக்காமல் ஏமாற்றத்துடன் சென்ற அவர் வீட்டிற்குத் திரும்பினுர். தனது பண்ணையின் தளவாடங்கள் எல்லாம் ஏலம் விடப்பட்டு வெறுமையானதோர் அலங்கோலக் காட்சியைக் காணப்போகின்ருேமே என்ற கண்ணீர் பெருக்கத்தோடு அவர் வீடுவந்து சேர்ந்தார். பண்ணையில் அவர் கண்டது என்ன? பண்ணையின் அனைத்துப் பொருட்களும் அப்படியேஇருந்தன. ஒருவரும் அவற்றை ஏலத்தில் எடுக்க முன்வரவில்லையா? முன்வந்தார்கள். அவருடைய அயலகத்தார் நல்ல விலைக்கு அவற்றை ஏலத்தில்

எடுத்து அப்படியே திரும்ப அவருக்கே கொடுத்துத் தொழிலை அவர் நல்லமுறையில் ஆரம்பிக்க வகைசெய்திருந்தனர். அந்த விவசாயி எதிர்பார்த்துக்கொண்டிருந்த 5000 டாலர்களும் ஒருவாரம் சென்ற பின் வந்தது. அதன்காரணமாக அவர் தமது தொழிலை நிறைவான மூலதனத்துடனும், சந்தோஷத்தோடும் ஆரம்பிக்க வகைசெய்தது. தேவனது தாமதங்கள் எப்பொழுதும் நமக்கு ஆசீர்வாதங்களையே சுமந்துவரும்.

சிலசமயங்களில் நமது ஜெபங்களுக்கான விடை மிகவும் தாமதமாய்ப் பிந்தி வருகின்றன. இதற்காக நாம் தேவனைத் தவறுதலாகப் புரிந்துகொள்ளக்கூடாது. தேவன் மிகுந்த ஞானமுள்ளவரானபடியால் அவர் ஒருக்காலும் தவறிழைக்கமாட்டார் என்ற அசையாத நம்பிக்கை நமக்கு வேண்டும்.

ஒரு இளம் தம்பதியினர் தொலைவிலுள்ளதோர் மிஷன் தளத்திற்குப் போவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்டனர். ஆனால் சற்றும் எதிர்பாராத விதமாக அவர்களது பிரயாணம் திடீரென்று நின்றுபோயிற்று. அந்த இளம் தம்பதியினர் மிகவும் கலக்கமுற்றனர். இந்த இக்கட்டான நேரம் டாக்டர் மக்ளலே என்பவர் "காலதாமதத்திலிருந்து நிறைவான ஆசீர்வாதம் ஊற்று நீரைப்போலப் பொங்கிவரும். நம்முடைய பரமபிதா சந்தர்ப்பச் சூழல்களுக்கு இலக்காகக்கூடியவரன்று. அவர் ஒருபோதும் தவறுகள் புரிபவர் அல்ல" என்று அம்மக்களுக்கு எழுதினர்.

சில சமயங்களில் தேவன் தமது பதிலைத் தாமதிக்கப்பண்ணுவது நாம் கேட்டதற்கும் அதிகமாக நமக்குக் கொடுப்பதற்காகவிருக்கும். வில்லியம் கர்நால் என்ற பதினேழாம் நூற்றாண்டு ஆங்கிலேய பியூரிட்டான் "சில ஜெபங்களுக்கு மற்ற ஜெபங்களைவிட நீண்ட கடற் பயணங்கள் உண்டு. ஆனால், அவைகள் திரும்பி வருகையில் திரண்ட பொக்கிஷங்களோடு வந்துசேரும். எனவே, தனது ஜெபத்திற்கான பதிலுக்காகக் காத்திருக்கும் ஆத்துமா எப்பொழுதும் பாக்கியசாலியே" என்று எழுதினர்.

புகழ்பெற்ற ஜெப மாந்தனாகிய ஜியார்ஜ் முல்லர் தமது நீண்ட ஜெப வாழ்க்கையின் அனுபவத்திலிருந்து "தேவனிடமிருந்து சில குறிப்பிட்ட ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நான் நீண்ட காலம் காத்திருக்க வேண்டியதானது. அநேக சந்தர்ப்பங்களில் ஜெபத்திற்கான விடை உடனே எனக்கு வந்து கிடைத்தது. சில சந்தர்ப்பங்களில் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள், இன்னும் அதற்கு மேலாகக்கூட நான் பொறுமையாகக் காத்திருக்க வேண்டியதானது, ஆனல் எப்படியிருந்தபோதினும் கடைசியில் ஆசீர்வாதமான பதில் கிடைக்கவே செய்தது".

எனவே நம்முடைய ஜெப மன்றாட்டுகளுக்குக் கர்த்தரிடமிருந்து பதில்வரத் தாமதித்தால் தேவன் எனது ஜெபத்திற்கு இல்லையென்ற பதிலை அளித்துவிட்டார் என்ற உடனடியான முடிவுக்கு நாம் வந்துவிடக்கூடாது. யார், யார் உத்தமமான இருதயத்தோடு ஆண்டவரை நோக்கிக் கூப்பிடுவார்களோ அவர்களுக்கெல்லாம் அவர் ஆசீர்வாதமான பலனைத் தப்பாது அளிக்கிறவராயிருக்கின்றார்.

"MOODY MONTHLY"

(மொழி பெயர்ப்பு)

எனது தாகத்துக்குத் தருவாயா?

(சென்ற மாதத் தொடர்ச்சி)

"அவருடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக"
(எபே. 1:5)

ரிஷிகேசத்தில் நான் இந்து சாதுக்கள் மத்தியில் இரகசியமாக சுவிசேஷ வேலை செய்துகொண்டிருப்பதை நான் தங்கியிருக்கும் ஆச்சிரமத்தில் எப்படியோ கண்டுபிடித்துவிட்டார்கள். அன்றிலிருந்து எனக்கு "லால் - பாதிரி" என்ற பட்டப் பெயரைச் சூட்டினார்கள். லால் பாதிரி என்றால் தமிழில் சிகப்புப் பாதிரி அதாவது ஆபத்தான சாமியார் என்பது பொருளாகும். எனது கிறிஸ்தவ நடவடிக்கைகளின் காரணமாக என்னை எப்படியாவது ஆச்சிரமத்திலிருந்து துரத்திவிடத் தங்களாலானமட்டும் பிரயத்தனப்பட்டும் அவர்களால் ஒன்றும் செய்யக்கூடாது போயிற்று. மற்ற இந்து சாதுக்களைப்போன்று பெண்ணாசை, பொன்னாசையின்றிப் பரிசுத்தமாகவும், எளிமையாகவும் ஜீவித்துக்கொண்டு, எனக்குக் கிடைப்பதையும் கூட மற்றவர்களுக்கு அன்புடன் பகிர்ந்து கொடுத்துக் கிறிஸ்து பெருமானின் அன்பைக் காண்பித்து ஜீவித்து வருகின்றமையால் என்னை எல்லாரும் தற்பொழுது அதிகமாக நேசிக்கின்றார்கள்.

சில இந்து சாதுக்களுக்குக் கிறிஸ்தவத் துண்டுப் பிரதிகளையும், புத்தகங்களையும் கொடுத்தால் வாங்கமாட்டார்கள். அவர்களின் மனந்திரும்புதலில் அக்கரைகொண்ட நான் அவற்றைத் தபால்மூலம் யாரோ ஒருவர் அனுப்பியிருப்பதைப்போல அவர்களுக்கு அனுப்பி வைப்பேன்.

மகாவீர்தாஸ் என்ற இந்து தபசிக்குக் கர்த்தராகிய இயேசுவைப்பற்றியும், அவர் மூலமாயுள்ள இரட்சிப்பைப்பற்றியும் அநேக முறை நேரில் கூறினேன். ஆனால் அவன் கேட்கவேயில்லை. எனவே, தபாலில் அவனுக்குப் புத்தகங்களை என்கைப்பட அனுப்பி வைத்தேன். புஸ்தகங்களைக் கண்ட அவன் "லால் பாதிரியாகிய"

நான்தான் அனுப்பியிருப்பேன் என்று சரியாக யூகித்துக்கொண்டு அவைகளைத் தீயில் போட்டு எரித்துவிட்டான்.

நடந்தது என்ன தெரியுமா? சில காலத்திற்குப் பின்னர் அவனுக்கும் மற்றொரு சாதுவுக்கும் இடையில் இருந்த கடுமையான கருத்து வேறுபாட்டின் காரணமாக, மற்றவன் இரட்டைக் குழல் துப்பாக்கியொன்றை ஒரு போலீஸ்காரரிடமிருந்து வாங்கிவந்து ஒருநாள் இரவில் மகாவீர்தாஸ் என்ற தபசியை இரு தடவைகள் துப்பாக்கியால் சுட்டபின், இரத்த வெள்ளத்தில் கிடந்த அவன் மீண்டும் உயிர் பிழைத்துவிடுவான் என்று அஞ்சி ஈட்டியாலும் அவனைக் குத்திக் கொன்றுபோட்டான். "அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடுதியில் நாசமடைவான்" (நீதி. 29:1) என்பது எத்தனை உண்மையென்று பாருங்கள். மகாவீர்தாஸின் கொலையுண்டசெய்தியை இந்தியாவின் பத்திரிக்கைகள் மிகவும் பரபரப்புடன் வெளியிட்டிருந்தன.

இமயமலைப் பகுதியிலுள்ள குரு என்ற பிராந்தியத்திற்கு நான் அநேக தடவைகள் சென்றிருக்கின்றேன். மிகவும் ஆபத்துக்கள் நிறைந்த வானளாவிய மலைகளும், பனிமூடிய சிகரங்களும், அடர்ந்த காடுகளும் அங்குண்டு. ஒருநாள் இரவு அங்கு ஓரிடத்தில் படுத்திருந்தேன். அன்றிரவில் சிவன் அல்லது சங்கரன் என்று சொல்லப்படக்கூடிய இந்து தெய்வங்களில் ஒன்று கையில் திரிசூலத்தை (முக்கூருள்ள ஈட்டி) ஏந்திக்கொண்டு தனது சடைகளையும் விரித்துப் போட்டுக்கொண்டு எனக்கு முன்பாக இங்குமங்கும் ஆடிக்கொண்டு "உனக்கு வேண்டியது என்ன? எது வேண்டுமானாலும் அதை நான் உனக்குத் தருகின்றேன்" என்றான். "உன்னுடையதொன்றும் எனக்குத் தேவையில்லை. என்னைவிட்டுப் போய்விடு" என்று கூறவே அவன் மறைந்துவிட்டான்.

எனது நீண்ட சுவிசேஷப் பயணங்களில் அநேக தடவைகள் மரணத்திற்கேதுவான ஆபத்துக்களில் நான் கர்த்தரால் அதிசயமானபிரகாரமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றேன். இமய மலைகளிலுள்ள மணலி (Manali) என்ற இடத்தில் ஒரு மாலைவேளை நான் ஒரு கானகத்தின் வழியாகத் தனித்து நடந்து வந்துகொண்டிருந்தேன். நான் வந்துகொண்டிருந்த பாதைக்கு மேலாக மேட்டுப் பகுதியில் சோளக் கொல்லை ஒன்று இருந்தது. அங்கே ஒரு கருத்த மனிதன் சோளக் கதிர்களைப் பறித்துக்கொண்டிருந்தான். கிராமத்திற்குச் செல்லும் வழி எப்படிச் செல்லுகின்றது என்று பல தடவைகள் ஹிந்தியில் கேட்டும் அவன் பதில் சொல்லாமல் தன்னுடைய வேலையிலேயே கண்ணும், கருத்துமாயிருந்தான். அவனுடைய அமைதி எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. மேலே ஏறிப்போய் அவனிடம் நேரில் வழியைக் கேட்க மனமற்று அப்படியே போய்விட்டேன்.

நான் கிராமத்திற்குள் வந்ததும் ஆடுகள் மேய்க்கும் பையன்கள் "தாத்தா, நீர் போய், போய் அந்தப் பெருங் கரடியிடத்திலா வழி கேட்கவேண்டும்" என்று கூறிச் சிரித்தார்கள். "நீர் அதனிடம் வழி கேட்பதை மலையிலிருந்து நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம்" என்று தொடர்ந்து கூறினார்கள். உண்மையில் நான் கரடிக்கு அருகாமையில் சென்றிருந்தால் என்னைப் பீறிக் கொன்று போட்டிருக்கும். கர்த்தருடைய ஆச்சரியமான பாதுகாவலின் கரங்கள் அங்கு என்னைத் தடுத்தாட்கொண்டது.

ஒருசமயம் குஜராத் மாநிலத்திலுள்ள கீர் என்ற இடத்திலுள்ள காட்டாறு ஒன்றில் ஒரு மத்தியானம் எனது துணிகளைத் துவைத்துப் பாறைகளில் உலர வைத்துக்கொண்டு நானும் குளித்துவிட்டு வெயிலில் அமர்ந்திருந்தேன். திடீரென்று எதேச்சையாக சற்று தூரத்திலுள்ள புதரைப் பார்த்தேன். பார்த்ததும் சற்று நேரம் திகைத்துப்போனேன். அங்கே ஒரு பெரிய ஆண் சிங்கம் என்னைப் பார்த்தவண்ணம் படுத்திருந்தது. அதற்கு அருகில் இன்னும் இரண்டு பெண் சிங்கங்கள் படுத்திருந்து ஒன்றையொன்று நாவால் நக்கிக்கொண்டிருந்தன. இன்றுதான் நமது வாழ்நாளின் கடைசி நாள். இந்தக்கொடிய மிருகங்களுக்கு நாம் இரையாவது திண்ணம். தேவனும் அப்படித்தான் தீர்மானித்துவிட்டார்போலும் என்று எண்ணிக்கொண்டு கருங்கல்லைப்போல அமர்ந்திருந்து ஆண்டவரையே தியானித்துக்கொண்டிருந்தேன். சற்று நேரத்தில் அந்தப் புதரிலிருந்து ஓர் சிங்கக்குட்டி எழும்பி என்னை நோக்கி வந்து பின்னர் வேறு திசையாகப் போக ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து மற்ற சிங்கங்கள் மூன்றும் எழுந்து போய்விட்டன. அந்தக் காட்டிலுள்ள சிங்கங்கள் பெரும்பாலும் மனிதர்களுக்குத் தீங்கிழைப்பதில்லை என்று அங்குள்ள மக்கள் என்னிடம் கூறினார்கள். எனினும், அந்தக் கொடிய மிருகங்களின் கூரிய கடைவாய்ப் பற்களுக்கு என்னைத் தற்காத்த கர்த்தருக்குத் துதி செலுத்தினேன்.

இமாச்சல் பிரதேசத்திலிருந்து ஒருநாள் குரு என்ற இடத்திலிருந்து பிரயாணம்பண்ணிப் பூந்தர் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தேன். அங்கிருந்து 15 மைல்கள் நடந்து ஷரி என்றவிடத்திற்கு வந்து மணிக்கரன் என்ற கிராமத்திற்குச் செல்லுவதற்காகக் கானகத்தின் ஊடாகக் கொட்டும் மழையிலும், சேற்றிலுமாக நடந்து சென்றுகொண்டிருந்தேன். நான் நடக்கவேண்டிய தூரம் இன்னும் 7 மைல்கள் இருந்தன. இடையில் ஒரு காட்டாறு மிகக் கடுமையான வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. தண்ணீரின் இழுப்பு பயங்கர வேகத்திலிருந்தது. நேரம் மாலை 5 மணிதானிருக்கும். ஆனால் அந்தக் கானகம் இருள்மூடி இரவைப்போலிருந்தது. நடுக்கானகத்திலிருந்த அந்தக் காட்டாற்றைக் கடப்பது என்பது நினைத்துப்பார்க்க முடியாததொன்றாகும். ஆற்றை எப்படியும் கடந்தாக வேண்டும். திரும்பி ஷரி என்றவிடத்திற்குப் போக முடியாது.

ஏனெனில் கொட்டும் மழையில் மிகவும் கஷ்டப்பட்டு ஆழமான சேற்றினூடே நீண்ட தூரம் நான் நடந்து வந்துவிட்டேன். என்ன செய்வதென்று எனக்கு ஒன்றும் தெரியாமல் மனங்குமுறிக் கண்ணீர்விட்டு அழுதுகொண்டிருந்தேன். கொஞ்ச நேரம் சென்றதன் பின்னர் மூன்று திடகாத்திரமான புருஷர் நீண்ட தடிகளை ஊன்றி, ஊன்றி மூவரும் ஒருவரையொருவர் பிடித்துக்கொண்டு காட்டாற்றைக் கடந்து இக்கரை வந்தனர். அழுதுகொண்டிருந்த என்னைக் கண்ட அவர்களில் ஒருவன் தனது தோளின்மேல் என்னைத் தூக்கி வைத்துத் தடியை ஊன்றிக்கொண்டே என்னை மறு கரைக்குக் கொண்டு சேர்த்தான். ஆ, ஆண்டவர் தமது மக்களின் ஆபத்துக் காலத்தில் எத்தனை அடைக்கலமும், பாதுகாவலும், வழிகாட்டியுமான தேவன்!

எனது வாழ்வில் தேவன் நிகழ்த்தியிருக்கும் அற்புத நிகழ்ச்சிகள் எத்தனையோ உண்டு. கர்த்தர் கிருபைகூர்ந்தால், அவருடைய பரிசுத்த வருகை தாமதித்தால் அவற்றைப் பின்னர் நான் உங்களுடன் தேவ எக்காளத்தில் பகிர்ந்துகொள்ளுவேன்.

நான் ஒரு கிறிஸ்தவ சாதுவாகவிருக்கின்றபடியால் எனது வாழ்க்கையில் அநேக போராட்டங்கள் எனக்குண்டு. இந்து விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட எந்தப் பதார்த்தங்களையும் நான் புசிக்கமாட்டேன். இதன் காரணமாக மிகவும் எளிமையான, எவ்வித போஷாக்மெற்ற உணவுதான் எப்போதும் எனக்குக் கிடைக்கும். எனினும், கர்த்தரே என் ஜீவனின் பெலனாக இந்நாள்வரை இருந்து வருகின்றார்.

இந்து விக்கிரகங்களை வழிபடும் யாத்திரீகர்கள் நான் ஒரு வித்தியாசமான சாதுவாகவிருப்பதால் பணம் எதுவும் எனக்குக் கொடுப்பதில்லை. நானும் அதை ஒருபோதும் விரும்புவதுமில்லை. என்றபோதிலும் அன்பின் ஆண்டவர் என் தேவைகளையெல்லாம் அற்புதமாக இந்நிமிஷம்வரைச் சந்தித்து வருகின்றார்.

ரிஷிகேசத்திலுள்ள அநேக சாதுக்கள் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைத் தங்களுக்குச் சேர்த்துவைத்திருக்கின்றனர். அநேக சாதுக்கள் அசுத்தமான தீய பாவவாழ்க்கை நடத்துகின்றனர். அவர்களுக்காகத் தேவனிடம் மன்றாடி ஜெபிக்கின்றேன். வழியும், சத்தியமும், ஜீவனுமான இயேசுவை அவர்களின் முன்வைத்தும் வருகின்றேன். இந்த சாதுக்கள், சுவாமிகளுக்காக நீங்கள் ஜெபித்துக் கொள்ளுங்கள். மேற்கு தீபெத்தில் நானும் கிறிஸ்துவுக்குள் எனது நேச சகோதரனான சாமுவேலும் விதைத்துவந்த தேவவசனங்கள் ஏற்றகாலத்தில் மிகுந்த பலன் கொடுக்கவும் நீங்கள் அன்புடன் ஜெபிக்கவேண்டும்.

எனது ஊழியத்தின் பாதையில் எனக்குவேண்டிய அனைத்து உதவிகளையும் செய்யக்கூடிய மிக அன்பான தேவப்பிள்ளை சாமு

லை எனக்களித்த என் ஆண்டவருக்கு நான் என்ன ஈட்டைச் செலுத்தமுடியும்.

ஒரு சுவையான நிகழ்ச்சியைக்கூறி எனது தாழ்மையான சாட்சியை முடிக்க விரும்புகின்றேன்.

ரிஷிகேசத்திலுள்ள காஙகக் குகையில் தனியஞக ஒருநாள் நித்திரையுபடுத்திருந்தேன். நள்ளிரவில் நான் கண் விழித்தபோது எனது கம்பளிப் போர்வைக்குமேலாக என்மீது ஏதோ ஒரு பெரிய மிருகம் படுத்திருப்பது தெரியவந்தது. எனக்கு என்னசெய்வதென்றே தெரியவில்லை. கொடிய கானக விலங்கான புலி, கடுவாய் போன்றவை சகவிருந்தால் நாம் இன்று அதற்கு இரையாவோம் என்ற எண்ணம் எனக்கு எழுந்தது. எனினும் கர்த்தரை நோக்கி மனதில் ஜெபித்துவிட்டுப் பக்கத்திலிருந்த பிரகாசமான டார்ச் விளக்கை அடித்துப்போட்டுப் போர்வையைத் தள்ளிக்கொண்டு சடுதியாகச் சத்தமிட்டுக்கொண்டு எழும்பினேன். நான் ஆச்சரியப்படும் விதத்தில் ஒரு பெரிய காட்டுப்பூனை பயந்து ஓடிக்கொண்டிருந்தது.

இது எனக்கு ஒன்றை நினைப்பூட்டுகின்றது நமது கிறிஸ்தவ ஜீவியத்திலும் கூடச் சிற்சில சமயங்களில் மலைபோன்ற பிரச்சினைகள் நம்மைத் தாக்கலாம். ஆயினும் நாம் அதற்குச் சற்றும் அஞ்சாது கர்த்தருடைய பெலத்தைச் சார்ந்து ஊக்கமான ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினுல் அதனை எதிர்க்கும்போது அது பனிபோல மறைந்துபோவதை நாம் கண்டு அதிசயிப்போம். பிரச்சினைகள் புலிபோல வந்து பூனையைப்போல ஓட்டம் பிடித்துவிடும்.

எனது இருதயத்தின் ஒரே ஏக்கம் என் அருமை இயேசுகிறிஸ்துவை, வேலிக்கு அப்பால் நின்றுகொண்டு "எனது தாகத்துக்குத் தருவாயா?" என்று அன்பொழுக என்னிடம் கேட்ட கல்வாரிமலை நாயகனை மத்திய ஆகாயத்தில் சந்திக்க வேண்டுமென்பதுதான். இதை வாசிக்கும் அன்பான ஆண்டவருடைய பிள்ளையே, கர்த்தருடைய வருகை வெகுசமீபம் என்பதை அறிவாயா? உலகில் தற்பொழுது நடக்கும் சம்பவங்கள் அனைத்தும் அவர் வருகை நாம் நினைப்பதற்கும் மேலாக சமீபித்துவிட்டது என்பதைச் சுட்டிக்காண்பித்து நிற்கின்றது. கர்த்தர் சீக்கிரம் வரப்போகின்ருர், அவரைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு. கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

(சாது கந்தையானந்த்)

தேவ எக்காளம்

ஆன்ம ஈடேற்றத்திற்கெனப் பிரசுரமாகும் ஓர் ஆவிக்குரிய மாதாந்திர வெளியீடு. இது எந்த ஒரு சபைப் பிரிவையும் சார்ந்த ஒரு பத்திரிக்கையல்ல. ஆண்டுச் சந்தா ரூ. 5. மட்டுமே.

அனுப்பவேண்டிய முகவரி:- DEVA EKKALAM,
Kotagiri P. O. - 643 217,
Nilgiris, S. India.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்சியைச் சித்தரிக்கும் ஒரு சிறிய படத்தை வரைந்து அத்துடன் முடிப்பது வழக்கம். அந்தப் படத்திற்கு மேலாக "இராக்காலம் வருகிறது" என்ற எழுத்துக்களை அவர் எழுதியிருப்பார்.

நமது உள்ளங்களை உலுக்கிவிடக்கூடியதான நிலையில் அமைந்த ஒரு ஆங்கிலப் பாடல் ஒன்று கீழ்க்கண்டவாறு உள்ளது:-

The time is short! - the season near,
When death will us remove,
To leave our friends, however dear,
And all we fondly love!

The time is short! sinners, beware,
Nor trifle time away;
The word of "great salvation" hear,
"While it is called to-day".

The time is short! ye rebels now
To Christ the Lord Submit;
To mercy's golden sceptre bow,
And fall at Jesus' feet.

The time is short! ye saints rejoice -
The Lord will quickly come:
Soon shall ye hear the Bridegroom's voice,
To call your spirits home.

The time is short! it swiftly flies -
The hour is just at hand,
When we shall mount above the skies,
And reach Emmanuel's land.

"எல்லாக் காரியங்களிலும் என்னை இயேசுவைப் போலாக்கும்"
(ராபர்ட் மர்ரே மச்செயின்)

"தன்னால் சேமிக்க முடிந்த அளவு சேமித்து, தன்னால் கொடுக்க முடிந்த அளவு தேவப் பணிகளுக்குக் கொடுப்பதே ஜான் வெஸ்லியின் வாழ்க்கை ஒழுங்காகும்".

"பாவங்களும், கடன்களும், எப்பொழுதும் நாம் நினைப்பதற்கும் மேலான தீங்கிழைக்கும் கொடிய தன்மையுடையவைகள்".

Edited and Published by N. Samuel, Kotagiri-643217. Nilgiris.
Printed at the Thoothan Press, Newport Street, Nagercoil.